# வைஷ்ணவ வேதாந்த செல்நெறியில் நிம்பாாக்கரின் வகிபாகம் : ஓர் விபரண ஆய்வு

# Role of Nimbarka on the Evolution of Vaishnava Vedanta: a Descriptive Study

P.Sachithananantham, (Ph.D. Reading),
Faculty of Graduate Studies, University of Jaffna,
Senior Lecturer, Department comparative Religion & Social harmony,
Faculty of Arts & Culture, Eastern University Sri Lanka.
Email: sachithananthamp@esn.ac.lk
N. Gnanakumaran Professor Emeritus (supervisor), University of Jaffna.

**ஆய்வுச்சுருக்கம்:**

இந்திய மெய்யியல் பரப்பில் வேதாந்திகளும், வேதாந்தக் கருத்துக்களும் பல்வேறுபட்ட ஆய்வுத் தேடலுக்கான தளமாக அமைந்துள்ளன. குறிப்பாக முப்பொருள் தத்துவ உண்மைக்கான தேடல் வேத அந்தமாகிய வேதாந்தம், அல்லது வேதசிரசு எனப்படும் உபநிடதகாலம் முதல் நிகழ்ந்தேறிவந்துள்ளது. குறிப்பாக சங்கரரின் அத்வைத வேதாந்த மரபினை நிராகரித்து முப்பொருள் தத்துவங்களுக்கான வியாக்கியானத்தை சங்கரருக்கு பின்வந்த வேதாந்திகள் முன்வைக்கத் தொடங்கிய காலத்தில் மேலும் விரிவடைந்தது. அந்தவகையில் தமிழில் வைஷ்ணவவேதாந்த மரபிலே பேசப்படுகின்ற வேதாந்திகளாக இராமானுஜரும் அவரது விசிட்டாத்வைதமும், மத்துவரும் அவரது துவைத வேதாந்தமும் முக்கியமாக எடுத்தாளப்பட்டுள்ளன. நிம்பாக்கரின் வேதாந்தச் சிந்தனையானது அவருக்கு முன்பு தோற்றம் பெற்ற வேதாந்த முறைமைகளை உள்வாங்கியும், அவற்றில் இருந்து வேறுபட்டும் இருமைவாத, ஒருமைவாதக் கருத்துக்களைக் கொண்டு அமைந்துள்ளது. ஆனாலும் நிம்பாக்கரினதும், அவரது வைஷ்ணவவேதாந்தச் சிந்தனையான துவைதாத்வைதம் அல்லது பேதாபேதக் கொள்கையானது தமிழில் அதிகமாக வெளிக்கொணரப்படாத நிலையே இன்றும் நிலவுகின்றது. இவ்வாய்வானது அக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதோடு நிம்பாக்கரின் வேதாந்தச் சிந்தனையை வெளிக் கொணர்வதனை நோக்கமாகவும் கொண்டு அமைகின்றது. வேதாந்தம் சார்பான நூல்கள், நிம்பாக்கரின் உரைநூல்கள், அதனோடு தொடர்புபட்ட வைஷ்ணவ வேதாந்தச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் நூல்கள் ஆய்வுக் கட்டுரைகள் என்பன ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அவற்றில் இருந்து ஒரு விபரணரீதியான பகுப்பாய்வாக இவ்வாய்வு அமைந்து இருக்கின்றது. விசேடமாக வைஷ்ணவவேதாந்திகளான இராமானுஜர் மத்துவர் பாஸ்கரர் வல்லபர் சைதன்னியர் போன்றோர்களில் இருந்து வேறுபட்ட விதமாக நிம்பாக்கர் தனது வேதாந்தக் கருத்தை எவ்வாறு எடுத்துக்காட்டியுள்ளார் என்பதனையும் வைஷ்ணவ வேதாந்தத்தில் அதன் தாக்கம் எவ்வாறு காணப்படுகின்றது என்பதனையும் எண்பிப்பதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்:** நிம்பாக்கர், பேதாபேதம், வைணவம், துவைதாத்வைதம், வைஷ்ணவவேதாந்தம்

## ஆய்வு அறிமுகம்

வேதாந்த பாரம்பரியம் என்பது வேத சிரசு அல்லது ஞானகாண்டப் பகுதி எனப்படும் அதன் அந்தமாக கொள்ளப்பப்படுகின்ற உபநிடத பாரம்பரியத்தின் ஒரு தொடர்ச்சியாகும். இந்திய மெய்யியல் பரப்பில் வேதாந்திகளின் பங்களிப்பு மிகமிக இன்றியமையாதது. அந்தவகையிலே கௌடபாதர் சங்கராச்சாரியார் இராமானுஜர் மத்துவர், வல்லபர், நிம்பாக்கர் சைதன்னியர் என ஒரு நீண்ட பாரம்பரியம் உண்டு இவர்களால் வேதஅந்தத்திற் கூறப்பட்ட மூலதத்துவங்களுக்கான வியாக்கியானங்களும் விபரிப்புக்களும் புதிய புதிய மெய்யியல் சிந்தனா கூடங்களைத் தோற்றுவித்தன. அந்தவகையிலே. வைஷ்ணவ வேதாந்த பாரம்பரியம் நாதமுனிவர்,

ஐமுனாசாரியர், இராமானுஜர் ஆகிய மூன்று ஆரம்ப கர்த்தாக்களோடு ஆரம்பித்தாலும் பெரியவாச்சான் பிள்ளை, பிள்ளைலோகாச்சாரியார், வேதாந்த தேசிகர்,மணவாளமுனிவர் போன்றோறால் வளர்த்துச் செல்லப்பட்டது. இவர்களால் வேதாந்தசூத்திரத்திற்கு எழுதப்பட்ட உரைகள் ஸ்ரீவைஷ்வ வேதாந்த வளர்ச்சிக்கு வித்திட்டன. அந்தவகையில் விசிட்டாத்வைதம், துவைதம், போன்ற வைஷ்ணவம் சார் மெய்யியல் சிந்தனா கூடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. மத்துவாச்சாரியர், இராமநாதர், நிம்பாக்கர், வல்லபாச்சாரியார், ஸ்ரீகிருஷ்ண சைதன்னியர், ஞானேஸ்வரார் போன்றோரால் அப்பணி தொடர்ந்தது.(Srinivasa Chara S.M, 1994, p. 26) அதனுடைய தொடர்ச்சியாக வைஷ்ணவ வேதாந்தத்தில் கி.பி 11 க்கும் 12ஆம் நூற்றாண்டிற்கும் இடையில் நிம்பாக்கர் தோற்றம் இடம்பெற்று அவர் வைஷ்ணவவேதாந்தத்தை துவைதாத்வைதம் எனும் புதிய ஒரு வியாக்கியானத்தோடு வளர்சியடையச் செய்தார்.(Umesh Mishra 1940, p. 6) நிம்பாக்கரின் சிந்தனையானது இராமானுஜரின் விசிட்டாத்வைதம் மத்துவரின் துவைதம் ஆகியவற்றில் இருந்து வேறுபட்டு அமைந்துள்ளது. நிம்பாக்கர் தனித்துவமான ஒரு வேதாந்த தத்துவத்தை உருவாக்கித்தந்துள்ளார். அதன்வழி வைஷ்ணவ வேதாந்தத்தில் தனக்கொன தனியான ஒரு இடத்தைப் பிடித்துள்ளார் எனலாம். நிம்பாக்கருக்குப் பின்பும் அவரது சீடர்களினால் துவைதாத்வைதக் கருத்துக்கள் முன்னெடுக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக ஸ்ரீனிவாசர், விஷ்வாசாரியார், புருசோத்தமர் போன்றோறால் நிம்பாக்கரின் கொள்கை தொடர்ந்து முன்நெடுக்கப்பட்டது.

**நிம்பாக்கர் பற்றிய அறிமுகம்**:

நிம்பாக்கர் தோற்றம் வளர்ச்சி பற்றி நோக்குகின்ற போது வைஷ்ணவ வேதாந்திகளின் வரிசையிலே இராமானுஜருக்கு அடுத்தவராக இராமானுஜரின் காலத்திற்குப் பிந்தியவராகவும் மத்துவரின் காலத்திற்கு முந்தியவராகவும் நிம்பாக்கர் வாழ்ந்தார் (1238-1317)என பண்டாக்கார் எடுத்துக் காட்டுகின்றார்.(Bandakar,R.G. 1965, p. 63) நிம்பாக்கரின் தாய் தந்தையரைப்பற்றி நோக்கும் பொழுது அருணாமுனி,ஜெயந்திதேவி க்கு பிறந்தவர என்றும், வேறுசிலர் ஜெகநாத் சரஸ்வதிக்கு ஆந்திரமாணிலத்தில் உள்ள வைடூரிப்பட்டினத்தில் தெலுங்குப்பிராமண குலத்தில் பிறந்தார் என குறிப்பிடுகின்றனர். Umesh Mishra 1940, p. 7) தெலுங்குப்பிராமணரான இவர் நிம்பபுர எனும் ஊரில் வாழ்ந்துவந்ததனால் நிம்பாக்கர் எனும் நாமம் கொண்டு விளங்கினார்.(Swami Tapasiyanada, 1991, p. 85) நிம்பாக்கரின் காலம் குறித்துப் பலவேறுபட்ட கணிப்புக்கள் ஆராய்ச்சியாளர்களுக்கிடையே நிலவினாலும் பொதுவா இராமானுஜருக்கு பிந்தியும் மத்துவருக்கு முந்திய காலத்திலும் வாழ்ந்திருக்கலாம் எனவும், சனாகாதி சம்பிரதாயத்தை நிறுவியவர் நிமபாக்கர் அது பாகவத சம்பிரதாயத்திற்கு முந்தியது என்றும், துவைதாத்வைதம் பதினொரம் நூற்றாண்டில் நிலவியது என்றும், நிம்பாக்கரின் மரனம் குறித்த குறிப்பில் அது 1162 AD எனக் குறிப்பிடப்பட்டிருப்பதும். இராமானுஜருடைய எழுத்துக்கனை உள்வாங்கிவராகவும், ஸ்ரீகண்டரை விமர்சித்து இருப்பதனாலும் இவர்களுக்குப்பின் கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் வாழ்ந்திருக்கலாம் என டாக்டர் எஸ் இராதாகிருஷ்ணன் அவிப்பிராயம் கொள்வதும்(Rathakrishnan., S., 2014, p. 78) நிம்பாக்கரின்

காலம் கி.பி 11ஆம் நூற்றாண்டு அல்லது 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி எனக் கொள்ள வழிவிடுகின்றது. அதேபோல வாவிஸ்யபுராணபரிசித்த எனும் நூலில் விஷ்ணுசுவாமிக்கு பின்னும் மத்துவருக்கு முன்பும் தோற்றம் பெற்றார் எனக்குறிப்பிடப்படுவதாக உமேஸ்மிஸ்ரா எடுத்துக்காட்டுவார்.(Umesh Mishra 1940, p. 7) நிம்பாக்கர் தனது மெய்யியல் கருத்துக்களை பிரம்மசூத்திரம், பகவக்கீதை போன்ற நூல்களை அடியொற்றி விளக்கினார்.

**இலக்கிய மீளாய்வு:**

இலக்கியமீளாய்வு பற்றிநோக்குகின்றபோது இந்திய மெய்யியலிலே வேதாந்தம், வேதாந்திகள் பிற்கால வேதாந்திகள், சைவ,வைஷ்ணவ வேதாந்த மரபுகள் விரிவாக்கமடைதல் தொடர்பாக பல ஆராய்ச்சிக் கட்டுரைகள், நூல்கள் காணக்கிடைக்கின்றன. ஆனாலும் பொரும்பாலன ஆய்வுகள் மரபுரீதியான வேதாந்திகளான சங்கரர், இராமானுஜர்,மத்துவர், போன்றவர்களைப் பற்றியே இடமபெற்றுள்ளன. அந்தவகையில் வேதாந்த மரபில் அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம், போன்ற சிந்தனாமுறைகள் பற்றிய ஆய்வுகள் அமையப் பெற்றுள்ளன.(Swami Harshananda, 2001, p. 25) இவை அனைத்துமே முப்பொருள் தத்துவத்தினை ஏற்றுக் கொள்கின்ற விதத்திலும் குறிப்பாக கடவுள் பற்றிய தத்தமது மரபுகளுக்கு ஏற்ப வியாக்கியானப்படுத்தலிலும் வெவ்வேறுபட்ட விதத்தில் வேதாந்த முறைகள் கட்டமைக்கப் படலாயிற்று. எடுத்துக்காட்டாக "அத்வைத வேதாந்தம் எடுத்துக்காட்டும் நிர்க்குண பிரம்மத்தை மறுத்து குணங்குறிகளுடன் கூடிய பிரம்மத்தை விஷ்ணுவாக ஒப்புக் கொண்டு அத்வைதத்திற்கு விசேடித்த விதத்தில் வியாக்கியானம் கொடுத்தவர் இராமானுஜர்"( முகுந்தன், ச,(2022), ப.88) இவ்வாறே அத்வைதம் கூறும் நிர்க்குண பிரம்மத்தை மறுத்து இறைவனுக்கு குணங்குறிகளுடன் கூடிய வியாக்கியானத்தை கொடுத்து இறைவன் வேறு பிரபஞ்சமும், ஜீவான்மாக்களும் வேறு எனவியாக்கியானம் கொடுத்து துவைத வேதாந்த முறைமையைத் தோற்றுவித்தவர் மத்துவர்( Swami Harshananda, 2001, p. 25) இவ்வாறான வேதாந்த மரபின் தொடர்ச்சியில் துவைதாத்வைதம் எனும் வேதாந்த முறையைத் தோற்றுவித்தவர் நிம்பாக்கர் ஆவார. இவர் துவைதம், அத்வைதம் ஆகிய இரு கோட்பாடுகளையும் இணைத்து துவைதாத்வைதம் எனும் கொள்கையினை உருவாக்கினார். அதன்பிரகாரம் அத்வைதம் உள்ளது பிரம்மம் மட்டுமே எனக் கொள்ள,விசிட்டாத்வைதமும், துவைதமும் உள்ளபொருள் சித், அசித், ஸ்வரன் எனக்கூற நிம்பாக்கரும் அதனை ஒப்புக் கொள்கின்றார். ஆனால் முப்பொருள்களுக்குமிடையேயான தொடர்பு எத்தகையது என்பது குறித்து இராமானுஜர், மத்துவரில் இருந்து வேறுபட்டு பேதாபேத அடிப்படையிலான வியாக்கியானத்தைக் கொடுக்கின்றார். பிரம்மத்திற்கும்(விஷ்ணு) விற்கும் ஜீவான்மாக்களுக்கும், பிரபஞ்சத்திற்கும் இடையே உள்ள தொடர்பு பேதமும், அபேதமும், ஒத்ததும் வேறுபட்டதும் ஆக எடுத்துக்காட்டுகின்றார் என்பதனை அக்ரவால் குறிப்பிடுகின்றார்.( Agrawal,M.M, 1997, p. 32) அவ்வாறே உள்ளபொருளை சுயாதீனமானவை, சுயாதீனத்தில்தங்கியிருப்பவை ஆக இரு பொரும் பிரிவுகளாக எடுத்துக்காட்டும் நிம்பாக்கர். பிரம்மம்(விஷ்ணு)வை சுயாதீனமானது (independence) ஆகவே கொள்கின்றார். ஆனாலும் ஜீவான்மாவும் பிரபஞ்சமும் பிரம்மத்தில் தங்கியிருப்பவை ஆனால் பிரம்மத்தைப் போல

உண்மைப் பொருட்களே என்பார். மஞ்சுடியு "God is the lord of Prakriti and the individual souls and the unconscious world" Prakrti and the souls are originless and eternal"( Manju Dube, 1983, p. 38) குறிப்பிடுகின்றார். மேலும் முப்பொருள்களுக்கும் இடையேயான தொடர்பு முற்றுமுழுதாக ஒத்ததும் அல்ல முற்றுமுழுதாக வேறுபட்டதுமல்ல அதனை "Being in the one in many like fire and its sparks or like water and its ripples: the relationship between unity and plurality is one of co -existence and not of contradiction" (ibid 39) எனக்குறிப்பிடுகின்றார். அவ்வாறா நிம்பாக்கர் வைஷ்ணவ வேதாந்திகளின் வரிசையில் தனதுகோட்பாட்டை ஏனையவர்களில் இருந்து வேறுபட்டு துவைதாத்வைதமாக கட்டமைத்துள்ளார்.

**நிம்பாக்கரின் வேதாந்தக் கருத்துக்கள்**

நிம்பாக்கர் தனது துவைதாத்வைதத்தில் பரமாத்மா, ஜீவன், ஜெகத், ஆகிய முப்பொருள் தத்துவத்தை ஏற்றுக் கொள்கின்றார். இவற்றை சுயாதீனமாவை, சுயாதீனமற்று பிறிதொன்றில் தங்கியிருப்பவை என இரண்டாக வகைப்படுத்தி சுயாதீனமானது என்பதனுள் பரப்பிரம்மனையும், தங்கியிருப்வை என்பதனுள் அறிவுள்ள ஆன்மா அறிவற்ற பிரகிருதி, காலம் ஆகிய வற்றை உள்ளடக்கி பேசுவார் (Umesha Mishra, 1940, p. 25) அம்முப்பொருள் தத்துவத்தை புரிந்து கொள்வதற்கான அறிவு முறைகளாக காட்சி , அனுமானம், ஆப்தம் என்பன அமைந்துள்ளன என்பது அவரது அடிப்படைப் போதனைகளுள் ஒன்று. நிம்பாக்கர் பிரம்மனுடைய இயல்பு பற்றிய விசாரணைகளை அல்லது ஆராய்ச்சிகளை வேதங்களை கற்று தேர்ந்த பின்பு மேற்கொண்டிருந்தார். பிரம்மன் ஸ்ரீ கிருஷ்ணனாக சர்வ வல்லமையுள்ளவனாக எல்லையற்ற ஆற்றலுடையவனாக அனைத்துக்குமான மூலகாரணமாக அனைத்து இருப்புக்களிலும் உள்ளார்ந்திருப்பவனாக விபரிக்கப்படுகின்றான். அவ்வாறான இயல்புடைய இறைவனை ஒருவர் உணர்ந்து கொள்வதற்கு தொடர்ச்சியான சிந்தனை, பக்தி என்பவற்றின் ஊடாக முயற்சிக்க வேண்டும். பிரம்ம சூத்திரத்தினுடைய முதலாவது சூத்திரம் பக்தன் தனது தொடர்ச்சியான முயற்சியினால் இறைவனை அல்லது இறைவனுடைய இயல்புகளை தன்னை உணர்ந்து கொள்ள முடியும் என வலியுறுத்துகின்றது. பிரம்மனை உணர்ந்து கொள்வதற்கு சீடன் அல்லது மாணவன் ஆசிரியருடைய அறிவுரைகளை புரிந்துக் கொண்டு சிறவனம், மனனம் போன்ற பயிற்சிகளின் ஊடாக தொடர்ச்சியாக முயற்சிப்பதனால் இறைவனை உணர்ந்துக் கொள்ள முடியும் என கூறுகின்றார். அதனுடைய அடுத்த கட்டமாக நித்தியாசனம் என்பது ஒருவருடைய அக செயற்பாடுகளை கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தி இறுதி உண்மைப் பொருள் மீது தியானிப்பதன் வழி இறைவனை உணர்ந்து கொள்ள முடியும் எனக் கூறுகிறார். ஆகவே சிரவனம், மனனம், நித்தியாசனம் எனப்படுகின்ற ஆத்மீக செயல்முறைக்கூடாக இறைவனை உணர்ந்து கொள்ள முடியும் என எடுத்துக்காட்டினார்.

நிம்பாக்கருடைய மெய்யியல் அல்லது தத்துவம் பேதா பேத வாதம் (The theory of Absolute as unity in difference) இதன் பிரகாரம் பிரம்மன் தமாகவே சடஉலகாகவும் ஆத்மாக்கலாகவும் மாறுதல் அதாவது உயிர்வாழ்வதற்கான சக்தியை பிரானன் பல்வேறு அறிவாற்றலுள்ள உணர்வு தொழிற்பாடுகளுக்கு உதவுவது போலவும் பிரானன் தொழிற்படுகின்றது. பிரம்மன் தனது

சுயத்தை அல்லது தன்னைத்தானே இழந்து விடாமல் எவ்வாறு பல்லாயிரம் அல்லது பல்வகையான ஆன்மாக்களாகவும் உலகாகவும் பரிணமிக்கின்றது. இதனை சிலந்தி தனது சிலந்தி வலையை தனே உருவாக்கி அதிலிருந்து தான் தனித்திருப்பது போல என உவமானத்தை பயன்படுத்துகின்றார். இதன் பிரகாரம் பிரம்மன் தனாகவே ஆத்மாக்களாகவும் உலகாகவும் ஆகுகின்ற போது அதனுடைய தூய்மையும் முழுமைத்துவமும் அவ்வாறே தனித்துவமாக இருக்கின்றது. அனைத்து இருப்புக்களும் அவற்றினுடைய தொழிற்பாடுகளும் பிரமனிடையே தங்கியுள்ளன. ஆகவே தான் பிரம்மன் அவற்றினுடைய மூலகாரணமாகவும் அவற்றை தீர்மாணிக்கின்ற காரணமாகவும் உள்ளார்.

துவைதாத்வைதம் என்பது ஒரு பொருளை இருவிதமாக அறிந்துகொள்ளுதல். துவைதம், அத்வைதம், ஆகிய இரு இயல்புகளும் ஒன்றுசேர்ந்த வியாக்கியானமாக துவைதாத்வைதம் அமைகின்றது. துவைதம் என்பது பல எனவும் அத்வைதம் என்பது ஒன்றையும் குறிக்கின்றது. இறைவன் அத்வைதமாகவும், ஜகத், பிரகிருதி, காலம் என்பன துவைதமாகவும் அமைந்துள்ளன. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு தங்கத்தினால் ஆன காதணி, வளையல் என்பன வடிவம் அளவு என்பனவற்றால் தம்மிடையே வேறுபாடுகளைக் கொண்டவை ஆனால் தங்கம் என்ற அடிப்படையில் அவை இரண்டும் தங்கம் என்ற ஒன்றுதான். இவ்வாறே இயல்பினால் சித், அசித் ஆகியவை பிரம்மத்தில் இருந்து வேறுபட்டன ஆனால் அனைத்தும் பிரம்மம் என்ற இயல்பின் அடிப்படையில் வேறுபடாதவை என எடுத்துக்காட்டுவார்.

நிம்பாக்கருடைய கோட்பாட்டின் படி பிரம்மன் உலகோடு ஒன்றுபட்டதாகவும் அதே நேரம் அதிலிருந்து வேறுபட்டதாகவும் இருக்கின்றது. அதாவது இறைவன் ஆத்மாக்களோடும் உலகோடும் ஒன்றுபட்டவனாகவும் வேறுபட்டவனாகவும் உள்ளான். இவருடைய பேதா பேத கோட்பாடு சுபாபிக பேதா பேத வாதம் (Svabhavika Bheda Bheba Vada) எனப்படும். இது வேதாந்தத்தினுடைய தூய இருபொருள் வாதத்தின் அடிப்படையில் பிரம்மன் இறுதிக் காரணமாக கொள்ளப்படுகின்றார். அதேபோல பிரம்மன் சடக்காரணமாக வேதாந்த இலக்கியங்களில் கொள்ளப்படுகின்றான். பிரம்மன் ஒருமைவாத வேதாந்தத்தின் படி வேறுபாடில்லாத, பண்புகளில்லாத அறிவுப் பொருளாக இறுதிப் பொருளாகக் கொள்ளப்படுகின்றது. அது காட்சிக்கு ஏதுவானதல்ல. புலன் உணர்வுகளுக்கு அப்பாற்பட்டது அல்லது அனுமானத்திற்கு அப்பாற்பட்டது. எந்தவிதமான விசேட அடையாளங்களாளோ இலக்கிய ஆதாரங்களாளோ விபரிக்க முடியாதவராக பிரம்மன் உள்ளார். பிரம்மன் புலன் உணர்வு கடந்தவராக இருப்பதனால் தர்க்கரீதியான நிருபனங்களுக்கு உள்ளாக்கப்பட முடியாதவர். பிரம்மனை அனுமானித்தல் அல்லது சிந்தித்தல் அல்லது கற்பனை செய்தல் தவறாகும். தர்க்க ரீதியாக நிருபித்தல் சாத்தியமில்லாததாகும் ஏனெனில் ஆதாரமற்ற ஒன்றினால் பிரம்மனை நிருபிக்க முடியாது. உதாரணமாக முயற்கொம்பு போல.

பிரம்மனை தன்னைத் தானே வெளிப்படுத்துபவராகக் கொண்டார் அவருடைய இருப்பை நிருபிப்பதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கு எந்த தேவையும் நிருபணமும் தேவையில்லை, நூல்களில் விபரிக்கப்படுவது மிதமிஞ்சியதாகவே காணப்படும். மேலும் தூய்மையான பண்புகளற்ற பிரம்மன் இறுதிப் பொருளாக புனிதமற்றவைகளோடு ஓர் தொடர்புபடாத இருப்பாக

உள்ளான். அவர் நித்தியமானவராகவும் கட்டுக்களில் இருந்து அல்லது தளைகளிலிருந்து விடுபட்டவராகவும் கொள்ளப்படுகின்றார்.

நிம்பாக்கர் வேதாந்த ரத்தின மஞ்சுசவில் புருஷோத்மனை சூரியனுக்கு ஒப்பாக விபரிக்கின்றார். சூரியன் தன்னகத்தே வெளிச்சத்தை வைத்திருந்து வெளிச்சத்தை வெளியிடுவதுபோல இறைவன் உள்ளான் எனக் கூறுகின்றார். மனித ஆத்மாக்கள் இறைவனுடைய பகுதி அவை இறைவனில் தங்கியுள்ளன. அவை தமது சராம்சமாகவும் இருப்புக்காகவும் தமது தொழிற்பாட்டிற்காகவும் இறைவனை தங்கியுள்ளது. இறைவனே இறுதி உண்மைப் பொருள் மனித ஆத்மாக்களுக்கும் வெளிப்படுத்தப்படாத இருப்புக்களுக்கும் அவனே இறுதிப் பொருள். அவை அனைத்தும் இறைவனின் பகுதிகளாகும்.

ஆத்மாக்கள் பற்றி நிம்பாக்கர் குறிப்பிடுகின்ற போது எல்லையற்றவை வடிவத்தில் அணுவைப் போன்றவை. மனிதன் பேற்றுக் கொள்கின்ற அனைத்து அறிவுகளையும் உடலின் பாகங்களின் உணர்வுகளையும் உணரக்கூடியதாக உள்ளது. அனுவின் வடிவாமான அந்த ஆத்மா பகுதிகள் அற்றது. இயற்கையாக இறைவனால் ஊடுறுவப்பட்டது.

**நிம்பாக்கரின் வைஷ்ணவ தத்துவம்:**

நிம்பாக்கரின் தத்தவம் துவைதாத்வைதம் அல்லது பேதா பேதம் எனப்படும். அதன் பிரகாரம் தனிமனித ஆத்மா பிரம்மனை ஒத்ததாக இருக்கின்றது. அதேவேளை பிரம்மனில் இருந்து வேறுபட்டதாகவும் இருக்கின்றது என்பதாகும். இது ஒருபுறம் அத்வைதமாகவும் மறுபுறம் துவைதமாகவும் தோண்றுகின்றது. ஆகவேதான் நிம்பாக்கரின் மெய்யியல் நிலைப்பாடு துவைதமாகவம் அத்துவைதமாகவும் அமைவதனால் துவைதாத்வைதம் அல்லது பேதா பேதம் என அமைகின்றது. நிம்பாக்கர் சங்கரர் குறிப்பிடுவது போல நிர்க்குண பிரம்மத்தை ஏற்றுக் கொள்ளவில்லை மாறாக பிரம்மன் சகுண நிலையில் பல்வேறுபட்ட குண இயல்புகளோடு கூடியதாக உள்ளது என்பதனையே ஏற்றுக் கொள்கின்றார். பிரம்மனை கிருஸ்ணராக உருவகிக்கின்றார். கிருஸ்ணர் எந்தவிதமான குறைகளும் அற்றவராக பிரகிருதியைப் போல பௌதீகக் குறைபாடுகள் அற்றவராக பூரணமானவராகவே கட்டமைக்கப்படுகின்றார். இவ்வாறு கடவுளைக் கட்டமைத்தாலும் நிம்பார்க்கர் உள்பொருள் மூன்று என்பார் அவை சித், அசித், கடவுள், சித் என்பது ஆத்மன் அல்லது அறிவுலகு சார்ந்தவை எனவும் அசித் என்பது அறிவற்ற சடவுலகு என்றும் கடவுளை அனைத்தையும் கட்டுப்படுத்தும் அதியுச்ச இருப்பாக எடுத்துக்காட்டுவார். தனித்துவமாக உள்ள கடவுளில் ஏனைய சித் அசித் ஆகியன தங்கியுள்ளன கடவுளோ ஏனைய எவற்றிலும் தங்கியிராத சுயாதீனமானவர். ஆனாலும் சித் அசித் என்பனவற்றை இறைவனில் இருந்து பிரிக்கமுயடிாயாது. ஏனெனில் அவை இறைவனை விட்டு தனித்து இருக்கமுடியாதவை. சித் அசித் ஆகியவை தங்கியிருப்பவை வெவ்வேறான இருப்புக்களாகவும் அதேநேரம் பிரிக்கமுடியாதவையாகவும் உள்ளன.

பிரம்மன் தானாகவே விளைவாக உள்ள அதேநேரம் அவர் தானாகவே உலகாக பரிணமிப்பதில்லை அதாவது சிலந்தி வலையை உருவாக்கி தான் அதிலே தரிப்பது போலல்லாது சூரியன் தன் கதிர்களைப் பரப்பி மீண்டும் அவற்றைப் பெற்றுக் கொள்வது போலவும் அதனால் சூரியனில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படுவதுமில்லை என்பது போலவும்

கடவுன் படைப்புச் செயற்பாட்டை இயற்றுகின்றான் என்பார் நிம்பார்க்கர் இதனை மேலும் உருதிப்படுத்த பட்டாச்சாரியார் நிம்பாக்கரின் பேதாபேதக் கொள்கை சூரியனையும் அதனுடைய ஒளிச்சுடரையும் ஒத்த உபமானத்திற்கூடான பகுப்பாய்வின் அடிப்படையில் வியாக்கியானப் படுத்தப்படுகின்றது என்பார்.

நிம்பாக்கரின் ஆத்மவாதக் கோட்பாட்டில் ஆத்மா பிரம்மனில் தங்கியுள்ளது. அதாவது பிரம்மன் கட்டுப்படுத்துபவராக (controller) நியமக (Nyamaka) எனவும், ஜீவன் கட்டுப்படுபவராகவும் (controlled) நியம்மிய (Niyamya) உள்ளார். ஜீவன் சுயம்பிரமான (self-subsistent-abhinna) நிலையில் பிரம்மனில் இருந்து வேறுபடாததாகவும், நியம்மிய (Niyamya) நிலையில் பிரம்மனில் இருந்து வேறுபட்டதாகவும் உள்ளார் இதுவே பேதம் அல்லது வேறுபாட்டைச் சுட்டிநிற்கின்றது. நிம்மபார்க்கர் தனிமனித ஆத்மா ஏனையவற்றில் இருந்து வேறுபட்டது எனவும் அவற்றிற் கிடையேயான தொர்பு துவைதம் எனவும் அத்வைதம் எனவும் கண்டார். மேலும் ஆத்மன் அல்லது உலகு இறைவனின் பகுதியாக அல்லது சக்தியாக இருக்கின்றன என்றார்.

**நிம்பாக்கரின் பௌதீக அதீத கோட்பாடு:**

நிம்பாக்கர் பௌதீகவதீத அடிப்படையில் துவைதாத்வைத (Dvaitadvaita) எனும் கோட்பாடு நிம்பாக்கரால் முன்வைக்கப்பட்டது. (Agrawal.M.M, 197, p. 1) துவைதாத்வைத அதாவது ஒருமையில் பன்மை (duality in Unity) இக்கோட்பாடு பாஸ்கரரின் பேதாபேதக் (Bhedabheda) ஒற்றுமையில் வேற்றுமை (difference in identity) எனும் கொள்கைக்கு ஒத்ததாகும். நிம்பாக்கர் பிரம்மனை ஒரு இறுதியான உண்மைப்பொருளாகக் கொள்கின்றார் ஆனால் அவர் தன்னை ஜீவனாகவும், உலகாகவும் வெளிப்படுத்துகின்றார். ஜீவனும், உலகும் அவரிலே உள்ளன அவனாலே செயல்படுகின்றன பிரபகவம் (Prabhava) எனும் சக்தியால் இயங்குகின்றன என்பார். உலகும் ஆன்மாக்களும் அவற்றின் இருப்புக்காக பிரம்மனில் தங்கியுள்ளன.

ஜீவனும் பிரபஞ்சமும் பிரம்மனில் இருந்து வேறுபட்டவை என்பது இயல்பானது. இவை இரண்டும் பிரம்மனினால் உருவாக்கப்பட்டு அவை அவரில் தங்கியிருந்தாலும் அவை பிரம்மனில் இருந்து வேறுபட்டவையே ஆன்மாவும், பிரபஞ்சமும், பிரம்மனில் இருந்து வேறுபட்டவை அதேநேரம் பிரிக்கமுடியாதளவு ஒன்றுபட்டவை இதுவே நிம்பாக்கரின் ஒருமையில் பன்மைக் கோட்பாடு. பிரபஞ்சத்திற்கும் ஆன்மாவிற்கும் பிரம்மத்தோடு உள்ள இணைப்பை நிம்பக்கர் கிட்டதட்ட இராமானுஜரின் அப்பிரகசித்தி (Inseparable) பிரிக்க முடியாத உறவோடு ஒத்ததாக எடுத்துக்காட்டுகின்றார் எனலாம்.

பிரம்மன் சடக்காரணியாகவும், இயங்கியல் காரணியாகவும் பிரபஞ்சத்திற்கு உள்ளான். ஆக இங்கு எவ்வாறு படைப்பிப்பவனே படைப்பாக இருப்பது? என்பது பெரும் கேள்வியாகின்றது அதற்கு நிம்பாக்கர் பிரம்மன் தனது சர்வவல்லமையுள்ள, சர்வஞானமுள்ள திறனில் தன்னை தனது பிரபாவம் எனும் சக்தியால் உலகாக வெளிப்படுத்துகின்றாரே ஒளிய அவரில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படுவதில்லை.

நிம்பாக்கரின் ஒன்றிற்கும் பலதிற்குமான உறவு எவ்வறானது என்ற கோட்பாட்டில் அவர் இராமானுஜரில் இருந்து வேறுபடுகின்றார் இராமானுஜர் பிரபஞ்சத்தையும், ஆன்மாக்களையும் கடவுளின் விசேட இயல்பாக, குணமாக காட்டுவதை மறுத்தார் நிம்பக்கர். ஏனெனில் குணாம்சம் என அழைக்கப்படுவதன் ஒருதாக்கம் உற்பத்தியாக்குபவனை ஏனையவற்றில் இருந்து வேறுபடுத்துகின்றது. பிரம்மனை விடவேறு பொருள் இல்லை என்றால் யார் எல்லா இருப்புக்களையும் உள்வாங்கியிருப்பது. அவர் குணாம்சங்கள் வேறுபட்டிருக்கமுடியாது. அவர் பிரம்மமாக சரீரி (ஆன்மா), உலகு சரீரம் (உலகு- (Body) ஆக விபரிக்கப்படமுடியாது ஆனால் பிரம்மனில் வேறுபடும் அத்தோடு வேறுபடாத இரண்டு இயல்புகளும் உண்டு என வேதாந்தம் விபரிக்கலாம் அது துவைதாத்வைதமே அன்றி விசிஷ்டாத்வைதம் அல்ல என்றார்.

வேறு ஒரு விமர்சனத்தை இராமானுஜருக்கு எதிராக நிம்பாக்கர் முன்வைக்கின்றார் அது ஆத்மாவும் உலகமும் வஸ்த்துக்கள் (Substances) ஆக குணாம்சங்களாக விபரிப்பது தவறு. நாங்கள் அறிவை ஒரு பொருளின் குணாம்சத்தின் ஊடாகவே பெறுகின்றோம். ஆகவே உலகமும், ஆன்மாவும் கடவுளின் குணம்சங்கள் (Attribute) என்றால் அவை எந்த மூலத்தின் குணாம்சங்களோ அந்த மூலத்தினைப் பற்றிய புரிந்துணர்வைத்தரவேண்டும் அதாவது “Qualities must give an understating about the Qualifier about God” ஆனால் ஆன்மாவும், உலகமும், கடவுள் பற்றிய அனுபவத்தைத் தருவதில்லை. மீண்டும் கடவுள் எல்லா நல்ல குணம்சங்களையும் கொண்டவர் என்றால் உலகத்திலும் ஆன்மாக்களிலும் அந்த குணம்சங்கள் பாவம் நிறைந்தனவாக, பூரணமற்றனவாக காணப்படுவதனால் பூரணமான இறைக்குணாம்சங்களுக்கு இவை இழுக்கை ஏற்படுத்தும் என இராமானுஜரின் விஷேச/attribute எனும் கோட்பாட்டை நிராகரிக்கின்றார் அதற்கு மாறாக தனது துவைதாத்வைதம் (Diversity in unity) என்பதனை முன்வைக்கின்றார்.

**நிம்பாக்கர் கூறும் கடவுள் பற்றிய கருத்துக்கள்:**

நிம்பாக்கரை பொறுத்தவரை உண்மைப்பொருள் இரு ஒழுங்கில் இயங்குகின்றது. ஒன்று சுயாதீனமானது சுவத்தாந்திர (Independent) மற்றயது தங்கியிருப்பது (பரத்தந்திர) (Dependent). இவற்றுள் சுயாதீனமான இருப்பு கடவுள் மாத்திரமே தங்கியிருக்கும் இருப்புக்கள் இரண்டு அறிவுள்ளவை மற்றயது அறிவற்றவை. ஜீவன் அறிவுள்ளது ஏனையவை அப்பிரசித்த or Super Natural, காலம், பிரகிருதி ஆகிய மூன்றுமாகும்.

கடவுள் பரமாத்மன் பகவான், ஈஸ்வரன், இராமா, கிருஸ்ணன் எனப் பல நாமங்களில் அழைக்கப்படுகின்றார். அவர் ஏனைய ஆன்மா, உலகு போன்றவற்றைப் போலல்லாது அறியாமை, அகந்தை, பற்று, வெறுப்பு இறப்பில் பயம், போன்றவற்றில் இருந்து பூரணமாக விடுபட்டவர். சர்வவல்லமையுள்ள, அவர் சத்திய சங்கல்ப்பப எனும் சக்தியைக் கொண்டுள்ளார். இவர் கர்மசக்கரத்தில் இருந்து விடுபட்டவர். எந்தவிதமான குணங்களுமற்றவர் ஆதலில் நிர்க்குண மன்றும் சகல புனிதமான குணங்களுக்குமான மூலம் அவரே படைப்பவர் அழிப்பவர்

அவரே ஆத்மாக்களுக்கு சம்சார உலகில் இருந்து மீட்டு விடுதலையை கொடுப்பவர். அவர் ஞானம்,சக்தி, பல, ஐஸ்வரிய, வீரிய, தேஜஸ் ஆகிய ஆறு பண்புகளைக் கொண்டுள்ளார்.

இறைவனின் ஸ்வருவ (Svarupa) ஸ்சுவவா (Svabhaava) எனும் இருநிலைகளுக்கிடையே பெரிய வேறுபாடுகள் இல்லை. மேல் கூறப்பட்ட சக்திகளும் மேலும் பலவும் சுபாவ எனும் நிலையில் உள்வாங்கப்பட்டுள்ளது. உதாரணமாக ஈஸ்வரன் ஏனைய இருப்புக்களோடு தொடர்புபட்டு இருக்கும் நிலையில் நிம்பாக்கரின் பொதுவான ஈஸ்வரன் அனைத்து புனித குணாம்சங்களின் மூலக்கூறாக மூலமாக (Substrate) ஆக உள்ளார். அவற்றுள் மிகச் சிலவற்றை மாத்திரமே மனிதனால் உணர்ந்து கொள்ளமுடியும் என்றார். இறைவன் நித்யமான எல்லையற்ற விதத்தில் தன்னைத் தானே வெளிப்படுத்தும் போது அறிவு, ஆனந்தம், எவ்லையற்ற நித்தியமான குணாம்சங்கள், அழுகு, இளமை, இனிமையான, வசிகரமான, மிருதுவான போன்ற பண்புகளுக்கெல்லாம் அதிபதியாக உள்ளார். இப்பண்புகள் அனைத்தும் அவரில் இருந்து வேறுபடாதவாறு அதேநேரம் அவற்றின் மூலம் இறைவனோடு ஒப்பிடப்படமுடியாதவை ஆக வேறுபட்டவை அதேநேரம் வேறுபாடு இன்மை அவருக்கும் அவரது குணம்சங்களுக்கும் வேறுபாடு இல்லை.

நித்தியமான கடவுளை இராத கிருஷ்ணராக அடையப் பரிந்துரைக்கின்றார் நிம்பாக்கர். இதில் கிருஷ்ணன் அன்பின் சக்தியாகவும் பிரிக்க முடியாதவர்களாக அடையாளப்படுத்தப்படுகின்றார்கள். இயற்கைச் சடஉலகுக்கும், பிரகிருதியின் தொடர்புக்கும் அப்பாற்பட்ட விண்ணகத்தில் நித்தியமான கடவுள் ராதா கிருஸ்ணர் உறைகிறார் எனக் கூறுவார். கடவுள் வைகுண்டத்தில் உறைபவர், வைகுண்டம் ஒருவிதமான அப்பிரக்த சத்வ (Aprakrta-Sattva) எனும் வஸ்த்துவினால் ஆக்கப்பட்டது. இது இராமானுஜரின் சுக்த சத்துவ என்பதற்கு ஒப்பானதாகும். இறைவன் உறையும் இடம் அங்கு நித்திய முத்தர்களான விஷ்வகேசன, ஜெயவிஜய போன்றவைகள் சேவகம் புரிபவர்கள், கருடன், ஆதிசேசன், சங்க, சுதர்ணச் சக்கரம், சரங்கா, கிருஷ்ண புல்லாங்குழல், முடி, கவசகுண்டலம், போன்றவை எல்லாம் அங்கு நிறைந்திருக்கும்.

பிரம்மமே உலகிற்கு காரணர் என்பதனை ஏனைய வேதாந்திகளைப் போல நிம்பாக்கரும் ஒப்புக் கொள்கின்றார் எடுத்துக்காட்டாக வேதாந்தபாரிஜாதசொரூபவ எனும் நூலில் மூன்றாம் சூத்திரத்தில் பிரம்மமே பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கு காரணர் எனக்குறிப்பிடுகின்றார் (Roma Bose, Translate, 1940, p. 51).

**பிரம்மத்தின் வெளிப்பாடு**

வைஷ்ணவ வேதாந்த மரபில் இறைவன் அவதரித்தல், தன்னை வெளிப்படுத்தல் என்பது வேதாந்திகளால் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு இறையியல் அடிப்படையாகும். அந்தவகையில் இறைவன் அடியவர்களுக்கு தீர்ப்பளிப்பதற்கு பல வடிவங்களில் தன்னை வெளிப்படுத்துகின்றார் என்பதனை நிம்பாக்கரும் ஒத்துக் மிகப்பிரதானமாக யுகா, அவதார் ஆகிய இரு வடிவங்களில் தன்னை வெளிப்படுத்துகின்றார். யுகா என்பது நான்கு வகைப்படும். அவை வாசுதேவ, சங்கர்சனர், பிரதியுள்ளர், அநிருத்திர என்பனவாகும். இவற்றுள் வாசுதேவன்

அதியுச்ச கடவுளாக கொள்ளப்பட்டார். சங்கர்சனர் சுந்தர்யசியாக அனைத்து ஆன்மாக்களிலும் வெளிப்படுபவர். பிரத்தியுன்னர் மனா (Mind) எல்லா உயிர்களிலும் உயிரானவர் அநிருத்திர அனைத்து காரணாகாரியங்களையும் கட்டுப்படுத்துபவர். இவ்வாறாக நிம்பாக்கர் பிரம்மம் மனுக்குல உய்வுக்காக தன்னை வெளிப்படுத்துவார் என்றகருத்தியலை வலியுறுத்துவது கடவுள் கருத்தியலை வெறுமெனே தத்துவமாக மாத்திரம் இல்லாது மக்கள் நிலைக்கு கடவுளை கொணர்கின்ற கைங்கரியமாக நோக்கற்பாலது.

**நிம்பாக்கர் கூறும் ஆன்மா பற்றிய கருத்து**

நிம்பாக்கர் ஆன்மாவை ஜீவான்மா எனச்சுட்டினார். அது அசித் எனப்படும் ஜீவான்மா அறிவுப் பொருளும், அறிவை வைத்திருப்பதுமாகும். ஞானசொரூபமானது வேதாந்தகாமதெனு எனும் நூலில் குறிப்பிடுகின்றார்.(Vedanta Parijata Saurubha, 2.3.26, Vedanta Kamadhenu Verse 1) அது அணுவைப் போண்றது (The Sutra: 3.25), Paranjpe V.G (ed) (1960) முப்பொருள்களில் ஒன்றாகிய ஆன்மா பற்றி தனது வேதாந்தகாமதேனு எனும் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் என்பதனை அக்ரவால் எடுத்துக்காட்டுவார். ‘‘ஆன்மா ஞானசொரூபமானது, பிரம்மனில் தங்கியிருப்பது, உடலில் சேர்ந்தும் சேராமலும் இருக்கும் தன்மையுள்ளது, அணுத்தன்மையானது, வெவ்வேறு உடல்களில் வெவ்வேறு விதமாக உள்ளது, அறிபவரும், எல்லையற்றதும்’’ (Agrawal, M.M, (1979), p 2), ஆன்மா அறிவுமயமானது அவ்வறிவு மனிதன் நடக்கும் பொழுது, உறங்கும் பொழுது, அழ்ந்த உறக்கத்தின் போது, சுவனத்தின் போதும், இறப்பின் பொழுதும், அனைத்து நிலைகளிலும் தொழிற்படும்.

ஆன்மா நித்தியமானது பிறக்காதது உடல் அழியும் பொழுது அழியாதது. அது பிரம்மத்தின் பகுதி. பகுதி என்பதனை பிரம்மத்தின் சக்தியில் ஒரு பகுதி சக்தியாகவே அதனைக் கொள்கின்றார். ஆன்மா ஊடுருவி இருப்பது (all pervading) அதாவது உடலில் ஊடுருவிநின்று இயங்குவது ஆன்மா.

ஜீவன் என ஆன்மாவைச் சுட்டிக்காட்டும் நிம்பாக்கர் அதனுடைய விசேடமான இயல்பினை ஆன்மா சடமாகிய உடல் அல்ல ஏழுவகையான உணரும் உறுப்புக்களும் அல்ல, ஐந்துவிதமான மூச்சுக்காற்றுமல்ல, மனமும் புத்தியுமல்ல எனவிபரிக்கின்றார். ஆன்மா அறிபவர், அனுபவிப்பர், தொழிற்படுபவர், ஆனாலும் அவை பிரம்மம் அல்ல. ஆகவே பிரம்மனில் தங்கியிருப்பவை. பிறப்பிறப்பில்லாத ஆன்மாக்கள் விடுதலையை வேண்டிநிற்பவை. ஆன்ம விடுதலை நிலையிலும் கூட இறைவனின் கட்டுப்பாட்டிலே இருக்கும். ஆன்மாக்கள் இருவகைப்படும் ஒன்று பத்தஜீவன், மற்றயது முத்தஜீவன்,

**நிம்பாக்கர் கூறும் பிரபஞ்சம் பற்றிய கருத்துக்கள்:**

நிம்பாக்கர் எடுத்துக்காட்டும் சடம் மூன்றுவகைப்படும் அவை அப்பிரக்ரத, பிரக்கிரத, காலம் என்பனவாகும். அவை மூன்றும். முறையே அப்பிரக்ரக என்பது பிரகிருதியில் இருந்தில்லாமலும், பிரக்ரதம் என்பது பிரகிருதியில் இருந்தும் தோண்றும்.

நிம்பாக்கர் பிரம்மன் படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் இயற்றுகின்றான். அந்தவகையிலே பிரம்மன் பிரபஞ்ச உற்பத்திக்கு முழுமையான காரணராகின்றார். பிரபஞ்சத்தைக் காப்பவரும் அழிப்பவரும் அவரே, பிரம்மமே பிரபஞ்சத்தின் உபாதன காரணரும் நிமித்த காரணருமாவார். பிரபஞ்சத்தைப் படைத்தல் என்பது எது நுன்னிய நிலையில் இருந்ததோ அதனை மீண்டும் தூலநிலைக்கு கொண்டுவருதல் அதனை பிரணாமம் அல்லது மாற்றியமைத்தல்( Parinamam or Modification). பால் தயிராக மாறுவது போல பரிணமித்தல் அல்லது மாறுதல் இங்கு பாலுக்கும், தயிருக்கும் இடையே பாரிய வெறுபாடுகள் இல்லை ஆனால் பால் தயிரல்ல தயிர் பாலுமல்ல ஆகவேதான் காரணம் காரியம் இரண்டிற்கும் இடையே பேதம் அபேதம் ஆகிய உறவு உண்டு என்பார். ஆகவேதான் நிம்பாக்கர் பிரம்மகாரணவாத அல்லது பிரம்மசக்திகாரணவாத எனத்தனது கோட்பாட்டை அழைத்தார். அதற்கு அவர் பரிணாம வாதத்தை ஸ்வரூப பரிணாமவாத, சக்திவிக்சப லக்சன பரிணாமவாதம் உன இருபிரிவுகளாக எடுத்துக்காட்டுவார்.

**நிம்பாக்கரும் ஏனைய வேதாந்திகளும்:**

நிம்பாக்கர் தனது காலத்திலும் தனது காலத்திற்குப் பின்னருமாக வாழ்ந்த பல்வேறு மெய்யியலாளர்களினதும் கருத்துக்களை மறுதலித்து தனது கருத்தை முன்னிருத்தியுள்ளார் அந்தவகையில் ஆதிசங்கரர், இராமானுஜர், மத்துவர் வல்லபர், சைதன்னியர் போன்றோர் பிரம்மத்திற்கும் ஜீவாத்மாவிற்கும் இடையேயான தொடர்பினை எவ்வாறு எடுத்துக்காட்டியுள்ளனர் அவர்களின் நிலைப்பாட்டிற்கும் அப்பால் இருந்து வேறுபட்ட விதத்தில் தனது கருத்துக்கனை முன்வைத்திருக்கின்றார்.அந்தவகையில் ஆதிசங்கரர் கேவலாத்வைதம் எனும் தத்துவமுறைக்குச் சொந்தக்காரர். அதன்பிரகாரம் உள்ளபொருன் ஒன்றே ஏனைய ஜீவாத்மா பிரபஞ்சம் போன்றன அவற்றின் தோற்றமே உள்ளபொருள் ஒன்றே(absolute monism) என்ற கருத்தை முன்வைக்கின்றார். நிம்பாக்கர் தத்துவமசி எனும் கருத்தை மகாவாக்கியத்திற்கான வியாக்கியானம் ஜீவன் பிரம்மனில் இருந்து வேறுபட்டதும் வேறுபடாததும் என்பார் சங்கரரோ வேறுபட்டதல்ல என்பார். சங்கரர் ஒருமைவாதி நிம்பாக்கர் ஒருமைவாதியல்ல. பிரம்மத்திற்கும் ஜீவான்மாவிற்கும் இடையேயான தொடர்பு பேதமும் அபேதாமும் ஆகும் என்பது நிம்பாக்கரின் வாதமாகும்.

சங்கரருக்கு அடுத்தபடியாகத் திகழ்பவர் இராமானுஜர் இவர் ஜீவ பிரபஞ்சத் தொடர்பை விசேச விசேசிய தொடர்பாக நோக்கினார்.அதனை உடலுக்கும் ஆன்மாவிற்குமான தொடர்பு, சரீர சரீரித் தொடர்வைப் போல என்றார். பிரம்மனும் ஆன்மாவும் பிரிந்து இருப்பதில்லை. அதாவது பொருளும் அதனது இயல்பும் போல எப்பொழுதம் இணைந்தே இருக்கும். இராமானுஜரைப் பொருத்தவரை ஜீவ ஆன்மத் தொடர்பு பேதம் அபேதம் எனும் இருவிதமாக அமைந்துள்ளது. பிரம்மன் ஆன்மாவையும், அசித்தையும் தனது குணாதிசயமாக கொண்டுள்ளர். இதனை நிம்பாக்கர் ஏற்பாரில்லை காரண காரிய அடிப்படையில் அந்த உறவை எடுத்துக்காட்டுவார். பேதம் அபேதம் என்ற அடிப்படையில் ஒன்றுபட்டாலும் இராமாணுஜரின் கருத்தை நிம்பாக்கர் ஏற்பாரில்லை. இராமானுஜரோ ஜீவன் பிரம்மத்தின் ஒரு குணாம்சம்,(attribute), ஜிவனால் பிரம்மன் தகுதிபெறுகின்றான். ஈஸ்வரன் ஜீவான்மா,பிரபஞ்சம் என்பவற்றிற்கிடையேயான தொடர்பு என்பது

ஒரு கூட்டாகும். வியாப்பிய வியாபகத்தன்மை ஒரு பொருளை ஏனையவற்றில் இருந்து வேறுபடுத்திக்காட்டுவது போல என்றார். உதாரணமாக சிவப்புப் பந்து என்பது நீலப்பந்தில் இருந்து வேறுபட்டது. சிவப்பு நிறம் பந்தில் இருந்து வேறுபட்டது. அதேபோல ஆன்மா பிரம்மத்தையோ அல்லது பிரம்மா ஆன்மாவையோ குறிப்பதில்லை. சிவப்பு நிறம் பந்தோடு சேர்ந்து இருந்தாதலும் சிவப்பு வேறு பந்து வேறு ஆகவே இந்த பேதநிலையில் இரமானுஜரின் கருத்து நிம்பாக்கரின் கருத்தோடு ஒத்துவருகின்றது. ஆனால் பேதாபேத கருத்தோடு அது ஒத்துவருவதில்லை.

பாஸ்கரரையும் நிம்பாக்கரையும் எடுத்து நோக்கும் போது பாஸ்கரரும் பிரம்ம ஆன்ம தொடர்பை பின்வருமாறு கையாண்டுள்ளார். உபாதிவாக எனும் கோட்பாட்டை முன்வைத்து விபரிக்கின்றார். அதன்பிரகாரம். பேதாபேத இணைப்பை இயல்பாகவே வேற்றுமை (பேதம்) வேற்றுமை இன்மை(அபேதம்) எனும் கருத்தை தருகின்றது என்பார். பாஸ்கரர் பிரம்மனை காரணராகவும் ஆன்மாவை காரணியாகவும் கொண்டு விளக்கினார். ஆன்ம விடுதலையின் பொழுது ஆன்மா பிரம்மத்தின் ஒத்த தன்மையை அடைகின்றது. பிரம்மன் பாதிப்புற்ற நிலையில் பேதாவஸ்த்தையின் போது கராணராகவும், ஆன்மா காரணியாகவும் தோன்றும் அப்பொழுது ஜீவன் அடிப்படையம்சத் தோடு ஒத்துக்காணப்படும், ஜீவனின் வேறுபாடு(பேதம்), இறைவனின் இயல்பும் நித்தியமானது உண்மையானது. பிரம்மத்திற்கும் ஆன்மாவிற்கும் இடையேயான வேறுபாடு நித்தியமானதோ அல்லது இயற்கையானதோ அது உண்மையானது. ஆக பிரம்மனும் ஆன்மாவும் ஒத்ததாகவே காணப்படுகின்றன என்பது பாஸ்கரரின் நிலைப்பாடு. ஆனாலும் கட்டுண்ட நிலையில் ஜீவான்மா பிரம்மனில் இருந்து வேறுபட்டதும் வேறுபடாததும், ஆனால் விடுதலையின் போது ஜீவான்மா பிரம்மத்துடன் ஒத்ததாக உள்ளது என்பது பாஸ்கரரின் நிலைப்பாடு.

மத்துவரையும் நிம்பாக்கரையும் எடுத்து நோக்கும் பொழுது மத்துவர் ஜீவ பிரம்மத்தொடர்பை பிம்ப பிரதிவிம்ப எடுத்துக்காட்டினூடாக விளக்குவார். பிரம்மம் ஒரே ஒரு சுயாதீனமான காரணம் ஜீவான்மாக்களின் தொழிற்பாடுகளுக்கு காரணமாக அமைகின்றது. பிமப பிரதிவிம்ப வாதமானது பிம்மத்திற்கும் ஆன்மாவிற்கும் இடையே ஒரு புனித உண்மைத்தொடர்பு உள்ளது என்பதைச் சுட்டிநிற்கின்றது. மேலும் மத்துவர் பல்வேறு உதாரணங்களை காட்டி ஆன்ம பிரபஞ்ச தொடர்பை விளக்குகின்றார் எடுத்துக்காட்டாக சோபாதிக, நிருபாதிக எனும்பதங்களைக் கையாண்டுள்ளார். நிருபாதீ என்பதனை சூரிய ஒளிபட்டு வானவில் தெறிப்பது போல ஜீவன் பிரம்மனின் பிரதிபலிப்பு என விளக்கினார். சாய புருச எனும் கருத்தை முன்வைத்து மனிதனும் அவனது நிழலும் போல எனஎடுத்துக்காட்டுவார். அடுத்து பகுதியையும் முழுமையும், அம்சாஅம்சி எனவும் ஜீவன் பிரம்மனின் பகுதி பிரம்மனில் இருந்து வேறுபட்டது. பிரம்மன் ஜீவனின் இயல்பு இருப்புக்கு காரணம்.மத்துவர் பேதம் அபேதம் என்பனவற்றை ஏற்றுக் கொள்வதில்லை. சொரூபஅம்ச வினாம்ச எனும் இரு கருத்துக்களால் எடுத்துக்காட்டுவார். மச்ச, கூர்ம அவதாரங்கள் சொரூப அம்சமாகவும், ஜீவான்மா வினாம்சத்தையும் குறிக்கின்றது என்பார். நிம்பாக்கர் மத்துவரின் போதனையில் இருந்து வேறுபடுகின்றார். எவ்வாறெனில் நிம்பாக்கர் வேற்றுமையும் வேற்றுமை இன்மையும் சமமாக உண்மையானவை எனக் கொண்டார். மத்துவர் பேதம் (difference) மட்டுமே உண்மையானது அபேதம் (non -difference) என்பதற்கு இடமே இல்லை என்பார். நிம்பாக்கரோ

சிவாகாவிக பேதாபேதம், பேதம் பேதமின்மை இரண்டையும் ஏற்றுக் கொள்கின்றார். மத்துவர் பேதத்தை மட்டுமே ஏற்பார். இது இருவருக்குமிடையே உள்ள வேறுபாடு ஆகும்.

அடுத்து நிம்பாக்கரையம் வல்லபாச்சாரியாரையும் எடுத்து நோக்குவோமானால் வல்லபர் சுத்தாத்வைதம் புனித அத்வைதம் எனும் கோட்பாட்டை முன்வைக்கின்றார். பிரம்மன் மாயையுடன் தொடர்பு அற்றவர். பிரம்மனும் பிரபஞ்சமும் தூய்மையானவை மாயையுடன் தொடர்பு பட்டவை அல்ல. வல்லபரைப் பொறுத்தவரை ஜீவனும் சடவுலகமும், பிரம்மனைப் போல உண்மையானவை. ஆகவே பிரம்மனுக்கும் பிரபஞ்சத்திற்கும் ஜீவான்மாக்களுக்குமிடையே இருமைத்தன்மை இல்லை. அந்தவகையில் வல்லவர் பிரம்மனுக்கும் ஜீவான்மாக்களுக்கும் இடையேயான தொடர்பு தூய இருமைத்தன்மையற்றதாக(non -duality) எடுத்துக்காட்டினார். ஜீவன் பிரம்மனின் பகுதி எனக்குறிப்பிட்டார் தீப்பொறி தீயில் இருந்து வேறுபட்டதல்ல என்பது போல ஜீவன் பிரம்மனில் இருந்து வேறுபட்டதல்ல ஜீவன் பிரம்மனை ஒத்தது. பரிணாமவாதம் எனும் கருத்தை முன்வைக்கின்றார். பிரம்மா ஜீவனாக மாறுகின்றது என எடுத்துக்காட்டுவார். அதாவது பிரம்மம் மாற்றமற்ற மாற்றம்(immutable transformation) இதனை அவிர்த்த பரிணாமவாதம் என எடுத்துக்காட்டுவார் அதாவது தங்கம் பலவேறு ஆபரணங்களாக மாறுதலுற்றாலும் அடிப்படையில் தங்கமே தங்கத்தில் மாற்றம் ஏற்படவதில்லை. தங்கம் தனது அடிப்படைத்தன்மையை இழக்காது ஆபரணமாக மாறுவது போல இறைவன் அவரது சச் சித் ஆனந்த இயல்புகள் ஜீவனிலும் பிரபஞ்சத்திலும் பரணமிக்கின்றன பிரம்மனில் எந்தவிதமான மாற்றத்தையும் பிரம்மனில் ஏற்படுத்தாது நிகழ்கின்றன. இதனை ஆத்மாக்கிரதபரிணாம என அழைத்தார். ஆகவே பிரம்மனுக்கும் ஆன்மாவிற்கும் இடையேயான தொடர்பு ஒத்ததன்மையானது (identity) என்பார். நிம்பாக்கரோ அபேதம் பேதம இரண்டும் உண்மையானது எனக் கூற வல்லபர் அபேதம் மாத்திரம் உண்மை என்றார். பேதத்திற்கு வல்லபரின் கொள்கையில் இடமே இல்லை எனலாம். நிம்பாக்கரும் இராமானுஜரும் பேதத்திற்கும் அபேதத்திற்கும் சமமான இடம் கொடுக்க வ்லலபர் அபேதத்திற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கின்றார்.

ஸ்ரீகிருஷ்ணசைதன்னியர் நிம்பாக்கரைப் போல ஜீவான்மா பிரம்ம உறவை முதிர்ந்த பேதமாக கொள்கின்றார். அசிந்நிய பேதாபேதம் எனும் கொள்கையை சைதன்னியர் முன்வைக்கின்றார். நிம்பாக்கரைப் போல வேற்றுமை, ஒற்றுமை இரண்டும் உண்மையானவை. ஜீவான்மாவிற்கும் பிரம்மத்திற்கும் இடையேயான தொடர்பு வேறுபட்டதும், வேறுபடாததுக்கும் இடையேயான புரிந்துகொள்ள முடியாதது (inconceivable) என எடுத்துக்காட்டுகின்றார். அடுத்து ஸ்ரீகண்டரை எடுத்து நோக்கும் பொழுது நிம்பாக்கரில் இருந்து சற்று வேறுபடுகின்றார். இவர் ஜீவான்மாவுக்கும் பிரபஞ்சத்திற்கும் இடையேயான தொடர்பு வேறுபட்டது. பிரம்மம் இயல்பாகவே பல பண்புகளின் உறைவிடம். பிரம்மம் எப்பொழுதும் சுயாதீனமானவர் சுதந்திரமானவர், ஜீவான்மா மாசுற்று இருப்பது போலல்லாது எந்த மாசுகளும் அற்றவராக பிரம்மத்தை எடுத்தாண்டார்.

**முடிவுரை:**

தொகுத்து நோக்கும் பொழுது பிற்கால வேதாந்திகளின் வரிசையிலே நிம்பாக்கர் தனது வேதாந்த கொள்கையை துவைதாத்வைதம் ஆக கட்டமைத்தார். உள்பொருள் பிரம்மம், ஜீவன், ஜெகத்(பிரபஞ்சம்) மூன்று அவற்றையும் அவற்றிற்கு இடையேயான தொடர்பையும் துவைதமாகவும், அத்வைதமாகவும் எடுத்து விளக்கி வியாக்கியானப் படுத்தியுள்ளார். முப்பொருளுக்கும் இடையேயான தொடர்பில் குறிப்பாக ஜீவ பிரம்மத் தொடர்பைக் காரணகாரிய(cause and effect) அடிப்படையில் எடுத்துக்காட்டியுள்ளார். அந்தவகையில் காரணகாரியம் என்பதனை காரியம் காரணத்தின் பகுதி(part and whole ) எனும் தொடர்புக்கூடாக எடுத்துக்காட்டுகின்றார். காரியம் (பகுதி) காரணத்தில் (முழுமை) இருந்து வேறுபட்டது. வல்லமை, வடிவம், தொழிற்பாடு ஆகிய பண்புகளில் இருந்து வேறுபடுகின்றது. எடுத்துக்காட்டாக களிமண், குவளை ஆகியவற்றை எடுத்து நோக்கினால் களிமன் குவளையில் இருந்து பல்வேறுவடிவங்களில் வேறுபடுவதனைக் பேதத்திற்கு எடுத்துக்காட்டலாம். அதேபோல பேதமின்மைக்கு பாம்பு அதனுடைய சுருள் இரண்டையும் எடுத்துக்காட்டுவார் அதன்பிரகாரம் பாம்பு காரணம், அதனுடைய சுருள் காரியம் அது பாம்பில் (காரியத்தில்) தங்கியுள்ளது. பாம்பு இல்லையென்றால் சுருள் இல்லை இதுவே வேற்றுமை இன்லை(non - different) பேதமின்மை. இதனூடாக நிம்பாக்கர் பிரம்ம, ஜீவாத்ம தொடர்பை பேதாபேத அடிப்படையில் எடுத்துக்காட்டியிருப்பது தனது சமகால வேதாந்திகளில் இருந்தும் வேறுபட்டும் தனக்கென தனித்துவமான பாணியிலும் தனது வேதாந்த தத்துவத்தை ஒருமைவாத(monistic) பண்மைவாத( Pluralistic) மாக கடவுள், ஜீவாத்மா, உலகு ஆகிய மூன்றும் ஒன்றில் இருந்து ஒன்று வேறுபட்டும், ஒன்றுபட்டும் உள்ளன என நிறுவியுள்ளார். நிம்பாக்கர் முப்பொருள்தத்துவ உண்மைகளை தனித்துவமாக எடுத்துக்காட்டியுள்ளார். நிம்பாக்கர் பற்றிய ஆய்வுகள் அதிகம் வெளிவராததால் வேதாந்த மரபுக்கு அணிசேர்த்தவராக அவரைக் கொள்ள வேண்டிய தேவைப்பாடு மேலெழுகின்ற சூழலில், நிம்பாக்கர் பற்றிய ஆய்வு தேவையாக உள்ளது. ஆகவே தற்கால இந்து தத்துவ ஆராய்ச்சியாளர்களுக்கும் இவ்வாய்வு ஒரு முன்னோடியாக அமையும் எனலாம்.

**உசாத்துணைநூல்கள்**

Agrawal. M.M, (1979), Philosophy of Nimbarka, Jainsons Printers, Agar-3, India

Bhandarkar, R.G,(1965), Vaishnavism Saivism, Minor religious System, Indological Book house, India

Manju Dube, Dr, (1983), Concept of God in Vaishnava Philosophical Systems, Varanasi

Paranjpe V.G (ed) (1960) The Vedanta with the Brahma Sutras with Bhasyas V. S GHATE , Poona

Radhakrishnan S, (1960), The Brahma Sutra, The Philosophy of Spiritual life, George Allen & Unwin, LTD.London

Roma Bose, (Translate) (1940),Vedanta Parijata Saurabha of Nimbarkar and Vedanta Kaustubha of Srinivasa,

Srinivasa Chara S.M, (1994),Vaisnavism, Its Philosophy theology and Religious Discipline. Motilal Banarsidass, Delhi,

Surendranath Dasgupta, (1991), A History of Indian Philosophy, Vol: V, Motilal Banarsidass, India

Swami Harshananda (2001), The Three Systems of Vedanta, Sri Ramakrishna Math, Madras

Umesh Mishra, (1940) Nimbarka School of Vedanta, University of Allahabad Studies, Allahabad India.

முகுந்தன், ச, (2022), வேதாந்த மெய்யியலின் நீட்சியும் நெகிழ்ச்சியும்,யாழ்ப்பாணம், இலங்கை.